# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### வாசிப்பு - உயர் பிரிவு – 9ஆம் 10ஆம் வகுப்பு மாணவர்கள்

## தமிழ் வளர்த்த பெரியோர்கள்.

செந்தமிழ், பைந்தமிழ், அழகுதமிழ், சுந்தரத்தமிழ், அமுதத்தமிழ் என்றெல்லாம் அழைக்கப்படும் எமது தாய்மொழியாம் தமிழ் மொழி தொன்மை மிக்க மொழிகளில் ஒன்றாகும். இத்தகைய எமது மொழியை பண்டைக்காலந் தொட்டு சங்கம் அமைத்து வளர்த்து வந்துள்ளனர். பண்டைய புலவர்கள் தமிழ்மொழியின் ஆற்றலை அதன் அருமையை, பெருமையை எல்லாம் உலகம் அறியும்பொருட்டு தொண்டாற்றியுள்ளார்கள். உலகப் பொதுமறையாம் திருக்குறளை அருளிய சான்றோர் திருவள்ளுவர். எந்நாட்டவர்க்கும், எம்மொழியினருக்கும், எவ்வினத்தவர்க்கும், எச்சாதியினர்க்கும் பயன்படும் நூல் திருக்குறளாகும்.

நல்லிசைப் புலமை மெல்லியலாராகிய ஔவையார் தமிழ் மக்களுக்கு வேண்டிய ஒழுக்கங்களையும் அறிவுரைகளையும் இனிக்க இனிக்க இனிய தமிழில் பாடியவராவார். படிக்கப் படிக்க, பாடப் பாட, நினைக்க நினைக்க இன்பம் தரும் இனிய பாடல்களில் இராமாயணத்தைப் பாடித் தமிழ்த் தாய்க்கு அணி செய்தவர் கம்பராவார்.

இலங்கையில் பிறந்த பலர் தமிழ் மொழியின் பெருமையை நாடறியச் செய்யும் வகையில் தொண்டாற்றியுள்ளனர். “நல்லை ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே” எனக்கூறும் அளவிற்குத் தமிழ் மொழியில் உரைநடையை ஆரம்பித்து வைத்த பெருமை நாவலர் அவர்களையே சாரும். தமிழ் மொழியில் ஒப்பியல் இலக்கணத்தின் தந்தை எனப் போற்றப்படும் சுவாமி விபுலானந்தர் தமிழ் மொழிக்காற்றிய பணிகள் பாராட்டத்தக்கன. சமயம் போதிக்கத் தொடங்கினாலும் தமிழே தன் மூச்சென வாழ்ந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள்.

இன்றைய தமிழ் மொழியின் நாயகர்களுள் முதனிலை வகிக்கும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் தமிழ் மக்கள் ஒவ்வொருவராலும் நன்கு அறியப்பட்டவர். உணர்ச்சிக் கவிகள் மூலம் தமிழ் மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்துக் கொண்டவர்களின் வரிசையில் பாரதிதாசன் அவர்கள் முன்நிற்கின்றார். எமது தாய்மொழியாம் பைந்தமிழுக்கு அரும்பணியாற்றிய பேரறிஞர்களை நாம் மறந்து விடாது அவர்தம் பணிகளைப் போற்றுவோமாக!